தேதி.20.05.2025 **STC.No.**244/2025

**<u>பிரமாண வாக்குமூலம்</u>**

1) எனது பெயர் ரம்யா, எனது கணவர் பெயர் பூபதி ஆகும். நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், குப்பாண்டபாளையம், மகுடஞ்சாவடி, கதவு எண்.7/9-11 என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன். இந்த மனுவில் நான் மனுதாரர் ஆவேன். இந்த மனுவில் எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தை, சத்திய பிரமாண பத்திரிக்கையாகத் தாக்கல் செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பிராமண பத்திரிக்கையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள விசயங்கள் அனைத்தையும் நான் எனது வழக்கறிஞரிடம் சொல்லி, அதை அவர் கணினி மூலம் பதிவு செய்து, அதனை நான் படித்து பார்த்து நான் சொன்னபடி இருந்ததால், அதில் நான் கையெழுத்திட்டு அந்த பிரமாண வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள 1, 3 முதல் 9 வரையிலான ஆவணங்கள் எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன் **(பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள 1, 3 முதல் 10 வரையிலான ஆவணங்கள் வா.சா.ஆ.01 முதல் வா.சா.ஆ.09 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

| வ.எண். | **தேதி** | **ஆவணங்கள் விவரம்** | **குறியீட்டு எண்.** |
|---|---|---|---|
| 1 | 04.11.2024 | காசோலை எண்.000005, HDFC வங்கி லிமிடெட், இளம்பிள்ளை கிளை, தொகை ரூ.20,00,000/- (அசல்) | வா.சா.ஆ.1 |
| 2 | 05.11.2024 | காசோலை எண்.000005 திருப்பப்பட்டதற்கான குறிப்பு ஆணை (அசல்) | வா.சா.ஆ.2 |
| 3 | 26.11.2024 | புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு (அலுவலக நகல்) | வா.சா.ஆ.3 |
| 4 | 09.11.2024 | எதிரி புகார்தாரருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு (அசல்) | வா.சா.ஆ.4 |
| 5 | 26.11.2024 | எதிரியின் சட்ட அறிவிப்புக்கு, புகார்தாரருக்கு அனுப்பிய பதில் சட்ட அறிவிப்பு (அலுவலக நகல்) | வா.சா.ஆ.5 |
| 6 | 28.11.2024 | சட்ட அறிவிப்பு எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை (அசல்) | வா.சா.ஆ.6 |
| 7 | 28.11.2024 | சட்ட அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான பதிவு தபாலின் இணைய வழி விவரம் (இணைய வழி நகல்) | வா.சா.ஆ.7 |

| | | | |
|---|---|---|---|
| 8 | 24.03.2013 | புகார்தாரரின் ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பிட்டு பார்த்து குறியீடு செய்யப்பட்டது) (நகல்) | வா.சா.ஆ.8 |
| 9 | 30.11.2024 | புகார்தாரர் அனுப்பிய பதில் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை (அசல்) | வா.சா.ஆ.9 |

2) ஆகவே, மனுவில் கூறியுள்ளபடி உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சாட்சி கூறியதை தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு, சாட்சி சரியாக உள்ளது என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்து செய்தார்.

Witness signed - Ramya

Sd/-D.Sivakumar

நீதித்துறை நடுவர் எண்.2,
சங்ககிரி.